**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.219/2020**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 1 |
| Name (திரு/திருமதி) | : அம்சா |
| Father's Name/ Husband's Name | : ரவிச்சந்திரன் |
| Village & Taluk | : மலையனூர் |
| Calling | : விவசாயம் |
| Age | : 49 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.08.2025**

(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

1. பட்டியல் சாட்சி–2 சினேகா எனது மகள் ஆவார். இவ்வழக்கின் எதிரி கலைமணி என்பவரை எனக்கு தெரியும். 23.02.2019 அன்று எங்கள் நிலத்தில் உள்ள வேர்கடலை பயிரை நானும், எனது மகள்கள் சினேகா மற்றும் மதுமிதா ஆகியோர்கள் எடுத்துக்கொண்டிருந்தோம். மாலை சுமார் 03.00 மணியளவில் நானும், எனது மகன் சினேகா என்பவரும் துணி துவைப்பதற்காக எங்கள் பம்ப் செட்டிடம் இருந்தோம். எங்களுக்கு சொந்தமான தண்ணீர் தொட்டி பம்ப் செட்டில் இருந்து சுமார் 200 அடி துாரத்தில் அமைந்துள்ளது. எனது மகன் தண்ணீர் தொட்டியிடம் துணி துவைத்துக்கொண்டிருந்தார். நான் மோட்டார் போடுவதற்காக சென்றிருந்தேன். அப்போது எதிரி கலைமணி என்பவர் எனது மகளுக்கு பின்புறமாக வந்து அவரது முகத்தை தண்ணீர் தொட்டிக்குள் முக்கினார். எனது மற்றொரு மகளான மதுமிதா என்னிடம் வந்து அக்காவை யாரோ ஒரு நபர் தண்ணீர்தொட்டிக்குள் முக்குவதாக கூறினார். நான் ஓடி வந்து எதிரியை பின்புறத்தில் இருந்து இழுத்தேன். அப்போது எதிரி எங்களை பார்த்து தெவிடியாங்களா உங்களை சாவடிக்க தான் நான் வந்துள்ளேன் என்று ஆபாசமாக பேசினார். என்னை கீழே தள்ளி எனது மார்பு மீது ஏறி கழுத்தை அமுக்கினார். எனது மகள்கள் பயந்து கொண்டு வேர்கடலை பறிப்பதற்கு ஏதுவாக நிழலுக்காக ஊன்றி இருந்த வேப்ப கொம்பை வைத்து எதிரியை அடித்தார்கள். அதில் அவர் கீழே விழுந்துவிட்டார். பின்னர் எனது மகள்கள் என்னை துாக்கிவிட்டனர். சண்டை முடிந்த பிறகு தான் அருகில் இருந்த நிலத்தில் இருந்தவர்கள் வந்து என்ன பிரச்சனை என்று கேட்டார்கள். பின்னர்

வளத்தி காவல் நிலையம் சென்று எதிரி மீது புகார் அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பின்னிட்டு காயமடைந்த எனது மகளை செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எதிரி எனது கணவரின் சித்தப்பா மகன் ஆவார். எங்களுக்கும் எதிரிக்கும் இடையே முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் சரிதான். வீட்டில் அவ்வப்போது சிறு சிறு சண்டைகள் ஏற்படும் அதில் முன் விரோதம் இருந்து வந்தது. சண்டை நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் எதிரிக்கு நிலம் உள்ளதா என்றால் அவர்கள் 2000ம் வருடம் விற்பனை செய்துவிட்டு சென்றுவிட்டார்கள். மேற்படி நிலத்திடம் எதிரிக்கு எந்த வகையான வேலையும் கிடையாது. சம்பவசமயத்தில் நானும், என் மகள்களும் எதிரியை அடித்துவிட்டதாக எங்கள் மீதும் வளத்தி காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் குற்ற எண்.67/2019 என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நாங்கள் அனைவரும் சேர்ந்து எதிரியை அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியதாக இந்நீதிமன்றத்தில் சிசி.96/2023 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் முதல் விசாரணையில் கூறிய சங்கதிகள் தான் அன்று சம்பவ இடத்தில் நடந்தது.

2. எனது கணவர் போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக சம்பவத்தின்போது பணியில் இருந்தார். எனது கணவர் அரசு பணியில் இருப்பதால் அதற்கு பாதிப்பு ஏற்பட்டுவிடுமோ என அஞ்சி நான் எதிரி மீது பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு எழுத தெரியாது படிக்க தெரியும். நான் கொடுத்த புகாரில் உள்ள விவரம் எனக்கு தெரியும், புகாரை பாரதி என்பவர் எழுதி கொடுத்தார். அவர் காவலர் அல்ல. புகார் மனுவை நான் படித்து பார்த்தேனா என்றால் எனது சிறிய மகள் படித்து கூறினாள்.

3. புகார் 23ம் தேதி கொடுக்கப்பட்டுள்ளதாக எழுப்பட்டிருந்தது. புகார் அளித்துவிட்டு அதன் பின்னர் தான் மருத்துவமனைக்கு சென்றோம். காவலர்கள் மருத்துவமனைக்கு செல்வதற்காக மெமோ அளித்தனரா என்றால் அது விவரம் தற்போது நினைவில் இல்லை. நான் மருத்துவ சிசிச்கை எடுத்துக்கொள்ளவில்லை. எனது மகள் 3 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். நான்கொடுத்த புகாரின் மீது காவலர்கள் என்று வழக்கு பதிவு செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. புகார் கொடுத்த பின்னிட்டு

காவலர்கள் 24ம் தேதி என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நானும், எனது கணவர் மற்றும் மகள்கள் தான் எதிரியை அடித்தோம் என்றாலும் அதில் இருந்து தப்பிக்க வேண்டியும் எனது கணவர் மீது வழக்கு வராமல் பார்த்துக்கொள்வதற்காகவும் எதிரி மீது பொய் புகார் அளித்துள்ளேன் என்றாலும், இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/-Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.